# கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

## முதலாம் வருட/முதலாம் அரையாண்டுக் கலைமாணித் தேர்வு 2016/2017
## (2016/2017 Batch)
## EC 1112 Fundamentals of Microeconomics

ரம்: 02 மணித்தியாலங்கள்

தி I ல் இரு வினாக்களுக்கும் பகுதி II ல் இரு வினாக்களுக்குமாக மொத்தம் நான்கு ாக்களுக்கு விடை தருக.

பகுதி 1

(அ) உற்பத்திக் காரணிகள் யாவை? விளக்குக.

(06 புள்ளிகள்)

(ஆ) அமையச் செலவு என்னும் பதத்தினை வரைவிலக்கணப்படுத்துக

(05 புள்ளிகள்)

(இ) நெல் மற்றும் புடைவை உற்பத்தியில் ஈடுபடும், கூடிச்செல்லும் எல்லை அமையச் செலவை எதிர்நோக்கும் நாடொன்றின் உற்பத்தி இயல்தகவு எல்லை ஒன்றினை வரைக. பின்வரும் நிகழ்வுகள் காரணமாக உற்பத்தி இயல்தகவு எல்லை எவ்வாறு மாற்றமடையுமெனக் காட்டுக.

(i) முன்னேற்றகரமாக புதிய வளங்களின் கண்டுபிடிப்பு

(ii) இரு உற்பத்தி துறைகளிலும் ஈடுபடுத்தத்தக்க ஊழியர்களின் எண்ணிக்கை பாரியளவில் அதிகரிப்பு ஏற்படல்.

(iii) அதிக வறட்ச்சி நிலை காரணமாக பயன்பாட்டிலுள்ள பண்ணை நிலங்களின் அளவு 10% இனால் குறைவடைதல்

(3*3= 9 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

(ஈ) அடிப்படைப் பொருளாதார பிரச்சனைகள் யாவை? வரைபட உதவியுடன் விளக்குக.

(08 புள்ளிகள்)

(உ) தாராளச் சந்தைப் பொருளாதாரமானது மத்திய திட்டமிடல் பொருளாதாரத்திலிருந்து எவ்வழியில் வேறுபடுகின்றது.

(06 புள்ளிகள்)

(உ) ஒரு கட்டளைப் பொருளாதாரத்தின் பிரதிகூலங்கள் எவை?

(06 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

(அ) சந்தை என்னும் எண்ணக்கருவினை விளக்குக.

(04 புள்ளிகள்)

(ஆ) ஒருபொருளின் கேள்வி மீது செல்வாக்கு செலத்தக்கூடிய அப்பொருளின் விலை தவிர்ந்த ஏனைய காரணிகளைக் குறிப்பிடுக.

(05 புள்ளிகள்)

(இ) கேள்வி மாற்றத்தையும் கேள்வித்தொகை மாற்றத்தையும் வேறுபடுத்துக.

(06 புள்ளிகள்)

(ஈ) ஓர் அத்தியாவசிய நுகர்வுப் பொருளின் மீது அரசாங்கம் உயர்ந்தபட்ச விலையினை விதிப்பதனால் ஏற்படும் பொருளாதார விளைவுகள் யாவை?

(05 புள்ளிகள்)
(மொத்தம் 20 புள்ளிகள்)

## பகுதி 11

04. (அ) சந்தை நிரம்பல் வளையியொன்றை வரையும் போது நிலையாக இருப்பதாக எடுகோள் கொள்ளப்படும் காரணிகள் யாவை?

(06 புள்ளிகள்)

(ஆ) குறைந்தபட்ச விலையையும் உயர்ந்தபட்ச விலையையும் வேறுபடுத்தி ஒவ்வொன்றிக்கும் ஒவ்வொரு உதாரணம் தருக.

(06 புள்ளிகள்)

(இ) பின்வரும் சமன்பாடுகள் பொருளாதாரமொன்றின் சந்தை கேள்வி, நிரம்பல் சார்புகளை விபரிக்கின்றன.

$Qd = 100 - 4P$

$Qs = 30 + 6P$

(i) சமன்பாடுகளைப் பயன்படுத்தி சந்தை சமநிலை விலையையும் சமநிலைத்தொகையையும் கணிப்பிட்டு. அதனை வரைபடத்தில் வரைந்து காட்டுக.

(06 புள்ளிகள்)

(ii) சந்தை சமநிலையின் போது உற்பத்தியாளர் மிகையையும் நுகர்வோர் மிகையையும் கணிப்பிட்டு, அதனைவரைபில் வரைந்து காட்டுக.

(06 புள்ளிகள்)

(ஈ) நிரம்பல் மாற்றம் என்றால் நீர் கருதுவது யாது?

(06 புள்ளிகள்)
(மொத்தம் 30 புள்ளிகள்

05. (அ) நிறைபோட்டிச்சந்தையின் நீண்டகாலச் சமநிலையை விளக்குக.

(06 புள்ளிகள்)

(ஆ) தனியுரிமைச்சந்தைக்கும் நிறைபோட்டிச்சந்தைக்கும் இடையிலான வேறுபாட்டை விளக்குக.

(06 புள்ளிகள்)

(இ) "சிலருரிமைச்சந்தையின் கேள்விக்கோடு முறிந்த கேள்விக்கோடாக காணப்படும்" விளக்குக.

(06 புள்ளிகள்)

(ஈ) "நீண்டகாலத்தில் அதிகரித்துச் செல்லும் அளவுத்திட்ட விளைவுவிதி தொழிற்படுவதற்கு காரணம் நீண்டகால உற்பத்தியில் செலவுச்சிக்கனங்கள் ஏற்படுவதனாலாகும்". இக்கூற்றின் பொருத்தப்பாட்டினை ஆராய்க.

(07 புள்ளிகள்)

(உ) எல்லை உற்பத்திக்கும் எல்லைச் செலவுக்கும் இடையிலான வேறுபாட்டை விளக்குக.

(05 புள்ளிகள்)
(மொத்தம் 30 புள்ளிகள்)

பின்வருவனவற்றிற்கு சிறு குறிப்பு எழுதுக

(அ) குறுக்குக் கேள்வி நெகிழ்ச்சி

(ஆ) குறைந்து செல்லும் அளவுத்திட்ட விளைவுவிதி

(இ) நேர்கணிய வெளிவாரி விளைவுகள்

(ஈ) புறைநடை நிரம்பல்

(உ) சந்தைத் தோல்வி

(5*6 = 30 புள்ளிகள்)